3. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 33–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதி 33–ஐத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 33–ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

4. அரசினர் தனித் தீர்மானம்

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்த தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக, கேரள அரசு அம்மாநில மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவரும் சூழ்நிலையில், கேரள அரசின் உண்மையற்ற பிரச்சாரத்தின் அடிப்படையில், தமிழக உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதை நாம் அனைவரும் ஒன்றுபட்டு தெரிவிக்கும்வகையில் இன்று இந்தச் சட்டமன்றச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.*